**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சமுதாய அடிப்படை கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம் - 2015**

---

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாட்டங்களில் சமுதாய அடிப்படை கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 01 ஆம் திகதிய ஜேஎவ்பிஆர் 9154 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 11(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அசைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் நெடுந்தீவு பிரதேச சபை, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மற்றும் கரைச்சி பிரதேச சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாவுள்ளது. முன்னேற்றப்பட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள் ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் யுத்தத்திற்கு பின்னரான கிராமிய சமூகங்களின் உள்ளூரில் இடம்பெயர்ந்து திரும்பிவந்தோருக்கான வறுமையை குறைத்து வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் ஆரம்ப குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 268.26 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.42 மில்லியனானதுடன் அதில் ரூபா 221.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2 மில்லியன் அல்லது மொத்த கிரயத்தில் 83 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாக வறுமை குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தால் (ஜேஃபிஆர்) நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 28.82 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.26 மில்லியன் அல்லது மொத்தக் கிரயததில் 11 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 17.74 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.16 மில்லியன் அல்லது மொத்தக் கிரயததில் 6 சதவீதம் சமூக பங்களிப்புகள் ஊடாக நிதியளிக்கப்பட வேண்டும். செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 ஆகஸ்ட் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்ட காலப்பகுதி 2015 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.3. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தினதும் கடன்வழங்கும் முகவர்களிதும் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(உ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஓ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் இல் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்பிற்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) கட்டுநிதிக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிகதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 28 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் சிவில் நடைபெறும் வேலைகளின் பெறுமதி ரூபா 2.6 மில்லியனாகும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 275.4 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 272.8 மில்லியன் வித்தியாசத்தை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டிற்காக வெளிநாட்டு கூறின் கீழ் காட்டப்பட்ட செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 31.8 மில்லியனாகும். எவ்வாறானினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 122.6 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. ரூபா 90.8 மில்லியன் வித்தியாசம் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 2.00 | 221.70 | 125.00 | 0.91 | 124.60 | 1.95 | 259.80 |
| இலங்கை அரசாங்கம் | 0.26 | 28.82 | 12.00 | 0.08 | 11.20 | 0.25 | 32.89 |
| சமுதாய பங்களிப்பு | 0.16 | 17.74 | - | - | - | - | - |
| | 2.42 | 268.26 | 137.00 | 0.99 | 135.80 | 2.20 | 292.69 |

செயற்திட்டத்திற்கான சமுதாய பங்களிப்பின் பெறுமதி மானிய அமுலாக்கல் கைநூலில் ரூபா 17.74 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.16 மில்லியனாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக நலனாளிளால் செய்யப்பட்ட பங்களிப்பின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றங்கள் முறையே 99 சதவீதம் மற்றும் 75 சதவீதமாக இருந்தது. ஆகவே, செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 2500 குடியிருப்பாளர்களிற்காக பாதுகாப்பான குடிதண்ணீர் வசதியையும் 645 குடியிருப்பாளர்களிற்காக் சுகாதார வசதிகளையும் வழங்கியிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 55.5 மில்லியன் கிரயத்தில் 2014 நவம்பரில் வழங்கப்பட்டிருந்த கடல் நீர் சேகரிப்பு ஒஸ்மோசிஸ் பொறியின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 2015 யூன் 30 இல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது பொறியின் ஊடாக 400 குடியிருப்பாளர்களிற்கு தண்ணீர் இணைப்புக்களை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 142 குடியிருக்காளர்களிற்கான தண்ணீர் இணைப்புக்களை மாத்திரம் 2016 செப்தெம்பர் 30 இல் வழங்கப்பட்டிருந்தது. பொறியின் மூலம் நாள் ஒன்றிற்கு 100 கன மீற்றர் உற்றத்தி செய்யமுடியுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2016 பெப்ரவரி முதல் செப்தெம்பர் வரையில் பதிவுசெய்யப்பட்ட உள்ளபடியான உற்பத்தி நாள் ஒன்றிற்கு 21 இற்கும் 28 இற்கு இடையிலான வீச்சில் இருந்தது.

(ஆ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மாதகல், சாந்தை, வட்டக்கச்சி, அக்கராயன் மற்றும் இயக்கச்சி பகுதிகளில் செயற்திட்டத்தால் சமுதாய அடிப்படை அமைப்புகள் உருவாக்கப்பட்டதுடன் செயற்திட்ட காலப்பகுதியின் போது அவற்றின் மீது ரூபா 37.8 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைக்கப்பட்ட 05 சமுதாய அடிப்படை அமைப்புகளில் 2016 ஒக்தோபர் 31 வரையும ஒன்று மாத்திரமே நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கீழ் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திடமிருந்து தொழில்நுட்ப, நிதி, நிலைபேறு மற்றும் வினைத்திறன் என்பவற்றிற்கான ஆதரவினை பெறுவதற்கு பதிவு செய்திருந்தது என்று அவதானிக்கப்பட்டது.

(ii) மேற்குறிப்பிட்ட சமுதாய அடிப்படை அமைப்புக்களின் நீர் வழங்கல் முறைமைகளிற்கான மண் பரிசோதனையியல் அறிக்கையின் பிரகாரம், தண்ணீரின் தரத்தினை ஒறுதிப்படுத்துவதற்கு மாதத்திற்கு ஒரு தடவை மேற்கொள்ள வேண்டிய முழுமையான இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், சாரைப்பிட்டியில் 2015 இல் தொடங்கப்பட்டிருந்த புதிய கிணறொன்றின் நிர்மாண வேலைகள் பாதியில் கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றின் மீது ஒப்பந்தகாரருக்கு செய்யப்பட்ட ரூபா 597,065 ஆன முற்பணக் கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தல்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2015 செப்தெம்பர் 30 இல் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 வரையும் சொத்துக்களை கையளிப்பதறம் கணக்கொழிப்பு கணக்குகளை தயாரிப்பதற்கு இயலக்கூடியவாறு உரிய அதிகாரிகளிற்கு பொறுப்புக்களை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.